# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு ஜுன் மாதம் 06-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 48 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கீதா | வயது | 36 /2022 |
| கணவர் பெயர் | சங்கரநாராயணன் | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடிதனம் | மதம் | |
| ஊர் | மன்னார்குடி | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மன்னார்குடியில் வசித்து வருகிறேன். எனக்கு ஆஜர் 1வது எதிரியை தெரியும். எனது கணவரின் நண்பர் ரமேஷ் என்பவர் மன்னார்குடியில் போட்டோ ஸ்டுடியோ வைத்துள்ளார். அவரது கடைக்கு 1வது எதிரி வந்தபோது மன்னார்குடியில் குடும்ப நல நீதிமன்றம் துவக்க உள்ளார்கள் என்றும், அதற்கு ஆள் எடுப்பதாகவும், தெரிந்தவர்கள் இருந்தால் சொல்லுமாறும் சொல்லியுள்ளார். அவர் மூலம் எனது கணவருக்கு தெரியவந்து நான் படித்துவிட்டு இருந்ததால் எனக்கு வேலை வாங்கலாம் என சொன்னார். 2018 ம் வருடம் மார்ச் மாதம் எனது கல்வி சான்றிதழ்களின் நகல்களை வாங்கிக்கொண்டு ரூ.2 லட்சம் பணம் வேண்டும் என்றும் உடனடியாக ரூ.1 லட்சம் தர வேண்டும் என்றும், வேலை வந்தவுடன் மீதமுள்ள ரூ.1 லட்சத்தை தரவேண்டும் என்றும் 1வது எதிரி சொன்னார். பணம் ஏற்பாடு செய்ய ஒரு நாள் காலதாமதமானது. அதற்கு 1வது எதிரி உடனடியாக பணம் கொடுக்காவிட்டால் வேறு ஆட்கள் தயாராக இருப்பதாக சொன்னார். அதனால் எனது கணவர் மற்றும் கணவரின் நண்பர் ரமேஷ், பக்கத்து வீட்டு அபாஸ் ஆகியோர் திருவாரூர் வந்து 1வது எதிரியிடம் பணம் ரூ.1 லட்சம் கொடுத்துவிட்டு வந்தார்கள். பணம் கொடுத்த பின்னர் ஒரு மாதமாகி வேலை கிடைக்காததால் போன் செய்து கேட்டபோது கோர்ட் வேலை நடந்துக்கொண்டிருக்கிறது அதுமுடிந்தவுடன் வேலை கிடைத்துவிடும் என்று 1வது எதிரி சொன்னார். ஆறு மாதத்திற்கு பின்னர் வேலை கிடைக்கவில்லை. அதன்பிறகு

1வது எதிரி போனை ஸ்விட்ச் ஆப் செய்துவிட்டார். அதன்பின்னர்தான் நாங்கள் ஏமாந்த விபரம் தெரியவந்தது. அதன் பிறகு நாங்கள் கேஸ் கொடுக்கலாம் என திருவாரூர் வந்தபோது ஏற்கனவே புகார் கொடுத்து விசாரணையில் உள்ள விபரம் தெரியவந்தது. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் முதல்விசாரணையில் சொன்ன விபரங்களை போலிசாரிடம் எழுத்து மூலமாக எழுதி கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தபோது எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு மன்னார்குடியில் வேலை வாங்கி தருவதாக யார் சொன்னார் என்றால் 1வது எதிரி சொன்னார். 1வது எதிரி அரசாங்க வேலையில் இல்லை என்றால் சரிதான். அரசு வேலையில் இல்லாத ஒருவரிடம் எப்படி பணம் கொடுத்தோம் என்றால் எனக்கு ஜட்ஜை தெரியும், வக்கீலை தெரியும் அவர்கள் மூலம்தான் நான் செய்கிறேன் என சொன்னதால் கொடுத்தோம். மன்னார்குடி கோர்ட்டில் வேலை நடப்பதை நான் போய் பார்த்தேனா என்றால் அந்த வழியாக போகும்போது குடும்ப நல நீதிமன்றம் வரப்போவதாக பழைய பி.எஸ்.என்.எல். கட்டிடத்தை வேலை செய்துக்கொண்டிருப்பதை நான் பார்த்தேன். 1வது எதிரி சக்திவேல் யார் மூலம் வேலை வாங்கிதரபோவதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. போலிசார் விசாரணையில் நான் அடிக்கடி பணத்தை திரும்ப கேட்டதால் வேலை வாங்கி தருவதாக சொன்ன கோவிந்தலெட்சுமி கோபித்துக்கொண்டு சென்றுவிட்டதாக என்னிடம் சொன்னார் என நான் சொல்லவில்லை. நான் எந்த தகவலையும் விசாரிக்காமல் 1வது எதிரி பணம் கொடுத்து ஏமாந்துவிட்டோம் என்றால் சரிதான். அவர் மீது நம்பிக்கை வைத்து பணம் கொடுத்துவிட்டோம். 2வது எதிரி கோவிந்தலெட்சுமி வேலை வாங்கி தருவதாக சொன்னதன் அடிப்படையில் 1வது எதிரி பணம் வாங்கி கொடுத்துள்ளார் என்றால் எனக்கு 1வது எதிரியை மட்டும்தான் தெரியும். 2வது எதிரி நீதிமன்றத்தில் வேலையில் இருந்ததால்தான் எனக்கு வேலை கிடைக்கும் என நான் நம்பி 1வது எதிரியிடம் பணம் கொடுத்தேன் என்றால் 2வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வது எனக்கு தெரியாது. 2வது எதிரிக்கு எதிராக நான் சாட்சியமளித்தால் எனது பணம் வராது என்பதால் போலிசார் அச்சுறுத்தலின்பேரில் நான் 1வது எதிரிக்கு எதிராக மட்டும் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாவட்டகுற்றப்பிரிவு போலிசார் விசாரணையில் நான் ஏதும் தெரிந்துக்கொண்டேனா என்றால் எங்களைப்போல் 83 நபர்களிடம் 1வது எதிரி பணம் வாங்கி மோசடி செய்த விபரத்தை தெரிந்துக்கொண்டோம். 2வது எதிரி நான் ஏற்கனவே பார்த்துள்ளேன் என்றும், நான் வேண்டும் என்றே நான் 1வது எதிரிக்கு எதிராக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (2 வது எதிரி தரப்பில்)**

2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியாது என்றால் சரிதான். 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை மையப்படுத்தி போலிசார் விசாரணையில் எவ்வித சங்கதிகளும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No.25/2020**

2022-ம் ஆண்டு ஜுன் மாதம் 06-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 49 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராகினி | வயது | 28 /2022 |
| கணவர் பெயர் | அருண்குமார் | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடிதனம் | மதம் | |
| ஊர் | மன்னார்குடி | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மன்னார்குடியில் வசித்து வருகிறேன். எனக்கு ஆஜர் 1வது எதிரி சக்திவேலை தெரியும். 2018 ம் வருடம் மார்ச் மாதம் எங்கள் குடும்ப நண்பரான மன்னார்குடி ரமேஷ்மூலம் 1வது எதிரி மன்னார்குடி குடும்ப நல நீதிமன்றத்தில் வேலை இருப்பதாக சொன்னார். எனக்கும் எனது அண்ணன் சாட்சி வீரராஜனுக்கும் வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி சொன்னார். ஒரு நபருக்கு ரூ.2 லட்சம் ஆகும் என்றும், முன்பணமாக ஒரு நபருக்கு ரூ.1லட்சம் கொடுக்க வேண்டும் என்று 1வது எதிரி சொன்னதால் 1வது எதிரி வீட்டில் வைத்து ரமேஷ் மூலமாக எனக்கு ரூ.1லட்சமும், எனது அண்ணனுக்கு ரூ.1லட்சமும் பணம் கொடுத்தோம். ஒரு மாததத்தில் வேலை வந்துவிடும் என்று 1வது எதிரி சொன்னார். அவர் சொன்னதுபோல் வேலை வரவில்லை. போன் செய்து கேட்டுக்கொண்டே இருந்தோம். ஆறுமாதம் ஆகியும் கிடைக்காததால் நேரடியாக 1வது எதிரியின் வீட்டிற்கு போனோம். பணம் ஜட்ஜ்யின் லாக்கரில் இருப்பதாகவும், அவரிடம் வேலை பார்க்கும் நபரிடம் பேசுமாறும் 1வது எதிரி போன் போட்டு கொடுத்தார். நாங்கள் தெரியாத நபரிடம் பேசமாட்டோம் என்று சொல்லிவிட்டோம். 10 நாளில் கிடைத்துவிடும் என்று சொல்லி அனுப்பினார். அதன்பிறகு போன் செய்து 1வது எதிரி எடுக்காததால் எங்களிடம் 1வது எதிரி பணத்தை வாங்கி ஏமாற்றியவிபரம் தெரியவந்தது. அதற்கு பிறகு கம்ளைண்ட் கொடுக்கலாம் என எஸ்.பி. ஆபீஸிற்கு வந்தபோது எங்களுக்கு முன்பே கம்ளைண்ட் கொடுத்திருந்த விபரம்

தெரியவந்தது. அதனால் எங்களை வழக்கில் சாட்சியாக சேர்த்துக்கொள்ளவதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (1வது எதிரி தரப்பில்)**

போலிசார் என்னை விசாரித்தபோது முதல் விசாரணையில் சொல்லிவிபரத்தைதான் சொல்லியுள்ளேன். நான் 1வது எதிரி சொன்னதன் அடிப்படையில் கோர்ட்டில் வேலை செய்யும் 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் போனில் பேசினேன் என்றால் சரியல்ல. 2வது எதிரி இரண்டு மாதத்திற்குள் வேலை வாங்கி தருவதாக சொன்னதன் அடிப்படையில்தான் நான் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி என்ன வேலையில் இருக்கிறார் என்பது எனக்கு தெரியாது. 1வது எதிரி அரசாங்க வேலையில் இல்லை என்பது தெரிந்துக்கொண்டேன். அரசு வேலையில் இல்லாத நபர் எப்படி வேலை வாங்கி தருவார் என நம்பினேன் என்றால் ஜட்ஜை தெரியும், ஜட்ஜ்தான் வாங்கி தருகிறார் என சொன்னார். பணம் எங்கு உள்ளது என தெரிந்துக்கொண்டேன் என்றால் ஜட்ஜ்யின் லாக்கரில் இருப்பதாக 1வது எதிரி சொன்னார். எனக்கு 2வது எதிரியை தெரியும் என்று தற்போது வழக்கிற்காக 2வது எதிரியை தெரியாது என சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2வது எதிரி நான் பணம் கொடுத்ததாக சொல்லும் காலத்தில் 1வது எதிரி வீட்டில் குடியிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. 2வது எதிரி நீதிமன்ற பணியில் இருந்ததால் அவருக்கு எதிராக சாட்சி சொன்னால் எனக்கு தொகை கிடைக்காது என காவல் துறையினர் சொன்னதன் அடிப்படையில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**குறுக்கு விசாரணை (2 வது எதிரி தரப்பில்)**

2வது எதிரி எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2வது எதிரியை மையப்படுத்தி போலிசார் விசாரணையில் சங்கதிகள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் 1வது எதிரி கோர்ட்டில் வேலை செய்யும் ஒரு நபரிடம் போன் போட்டு பேச சொன்னதாக சொல்வது எங்களை நம்ப வைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் 1வது எதிரியால் பொய்யாக சொல்லப்பட்டது என்றால் அது எனக்கு தெரியவில்லை.